# ராணுவத்தின் சமாதான உணர்வு குழம்பியது

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 04 இதழ் 259
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-10-1994

## அதிகாரிகள் கவலை

[கொழும்பு[

புதிய அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்த நாட்கள் தொடக்கம் இன்றுவரை இராணுவமும் இந்த நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்படுவதையே விரும்புவதாக அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தோம். ஆனுல் பிரதமர் திருமதி ந்திரிகா பண்

(6ம் பக்ஃம் பார்க்க)

## படையினர்மனநிலை அறியப்படும்

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்னர் படையினரின் மனநிலை குறித்து அரசு அறிந்து கொள்ளும் என உத்தியோகபூர்வ வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

யுத்த நிறுத்தம் சம்பந்தமாக உடன்பாடுகள் படையினருக்கு தெரிவிக்கப்படுவதுடன் இது சம்பந்தமாக அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுடன் அமைச்சர் மட்டபேச்சையடுத்து ஜனுதிபதி தேர்தலின் பின்பே

# யுத்தநிறுத்தம் பற்றி முடிவு!

## அமைச்சர் தர்மசிறி சேனுநாயக்கா தகவல்

[கொழும்பு]

யுத்தநிறுத்தம் பற்றி ஜனுதிபதித் தேர்தலின் பிறகே முடிவு எடுக்கப்படும். ஜனுதிபதித் தேர்தலின் பின்பே அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை ஒன்றை விடுதலைப்புலிகளுடன் அரசு மேற்கொள்ளும். யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இப் பேச்சுவார்த்தைகளையடுத்தே யுத்தநிறுத்தம் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று இத் தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், அரசப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்குமிடையில், எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் 2-வது

(2-ம் பக்கம் பார்க்க)

## 2-ம் கட்ட பேச்சுவார்த்தை 24ம் திகதி மாத்திரம் நடைபெறும்!

(கொழும்பு[

அரசதரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாது கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 24-ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இம்முறை நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தை ஒரு நாள் மாத்திரமே நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.

அரச தரப்பில் முதல்கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அதே குழுவினரே இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையிலும் கலந்து

(2-ம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் வழங்குவது பற்றி விரிவாக ஆராயப்படும்

(கொழும்பு)

யுத்தநிறுத்தம், வடபகுதிக்கு மின்சாரம் தொலைத் தொடர்பு ஆகியவற்றை ஏற்படுத்துவது பற்றியும். யாழ் மக்களின் பொருளாதாரக் க்ஷ்டங்களை நிவர்த்திசெய்வதற்கான வழிவகைகள் குறித்தும் அரசு-புலிகள் இடையிலான இரணடாவது கட்ட பேச்சுவார்த்தையில் ஆராயப்படும் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன,

யுந்தநிறுத்தம் குறித்து விடுதலைப்புலிகளின் தரப்பில் என்ன தெரிவிக்கப்படுகின்றன என்பதை அரசு குழு அன்று

(2-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்கில் இம்மாத இறுதிக்குள்

## கூ. மொ. விற்பனவு கிளை; அமைச்சர்வந்துதிறக்கமுடிவு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இம் மாத இறுதிக்குள் கூட்டுறவு மொத்த விற்பனை கிளை ஸ்தாபனம் ஒன்று திறந்துவைக்கப் படவுள்ளதாக வர்த்தக வாணிப | உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இக்கிளையைத் திறந்துவைப்பதற்காக யாழ்ப் பாணம் வருவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்,

பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவின் பணிப்புரையின் பேரிலேயே இக்கிளை திறக்கப்படவுள்ளதாகவும் இது விடயம் தொடர்பாக தமது அமைச்சினதும் கூட்டுறவு மொத்த திணைக்களத்தினதும்

(2-ம் பக்கம் பார்க்க)

முதலாம் கட்ட

## பேச்சுவிபரங்களை சந்திரிகா ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்-அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 1-ம் கட்ட பேச்சுவார்த்தையின் விபரங்கள் கூட்டறிக்கை பிரதமரின் பரிசீலனையில் தற்போது இருப்பதாக இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்களுள் ஒருவரான திரு. லயனல் பெர்னுண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (க இ)

## படை அதிகரரிகளுடன் பிரதமர் ஆராய்வார்

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் குறித்து விடுதலைப் புலிகள் அரச தரப்புக் குழுவினரிடம் சமர்ப்பிக்கவுள்ள ஆலோசனைகளை பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆராயவுள்ளார்.

பாதுகாப்புப் படையினரின் உயர் அதிகாரிகளை அழைத்து அவர் இந்த ஆலோசனை அறிக்கையை ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## 40 தமிழ் கைதிகளும் விடுவிக்கப்படவில்லை

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையிலிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்டதாக அரசாங்கத்தால் குறிப்பிடப் படும் 40 இலங்கை தமிழ் கைதிகளும்இன்னமும் விடுதலை செய்யப்பட வில்லையென மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலரின் உத்

(2-ம் பக்கம் பார்க்க)

பலஸ்தீன விடுதலை இயக்கததுக்கு

## அரசு இலவச கட்டிடம் வழங்கியது

(கொழும்பு)

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இலங்கை அரசு இலவசமாக கட்டிடம் ஒன்றை வழங்கியது.

இலங்கையிலுள்ள பாலஸ்தீனவிடுதலை இயக்க பிரிவினர் எதிர்நோக்கும் நிதிநெருக்கடியைத் தவிர்க்கும்விதமாகவே அந்த இயக்கத்துக்கு இந்த கட்டிடம் வழங்கப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

வைத்தியம்

செங்கண்மாரி Hepat tis) இரப்பை அல்சர்' ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிஸம், தலையிடி, தலை காலவியல், சருமநோய் கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராச ரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப் பாணம். (சி-1254)


# இராசி பலன்

21 - 10 - 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி- 04)

துதியை மு. இ. 10-01 வரை: பரணி மு. இ. 7-27 வரை. இராகுகாலம் 10-32 முதல் 12-02 வரை: சுப நேரம் காலை 6-02 முதல் 7-32 வரை சித்தயோகம்

மேடம்: வாழ்க்கைச் சுகம், தியாக உணர்வு. கலந்துரை யாடல்

இடபம்: முறுகல் நிலை, மன வேதனை, தொழில் பாதிப்பு

மிதுனம்: குடும்ப சிந்தனை, பணவரவு, சுபநிகழ்வு

கடகம்: முயற்சி பலிதம். தாயார் பணிவிடை. பயணம்

சிங்கம்: காரிய விரோதம், நண்பர் துயர். அலைச்சல்

கன்னி: பிறர் கண்டனம். மனக்குமுறல். புரியாத புதிர்

துலாம்: பொதுப்பணி, தொழில் சிறப்பு, தானதர்மம்

விருச்சிகம்: பதவிநிலை உயர்வு, அதிகாரிகள் பாராட்டு, நற்செய்தி.

தனுசு: எதிரிகள் துயர், மனவேதனை, உடல் அசதி

மகரம்: சொற்போர், தொழில் பகை குடும்ப பிரிவு

கும்பம்: உறவினர் சகாயம் புத்திரர் பெருமை, கலகலப்பு

மீனம்: தனிமைப்படல். வசதிக் குறைவு. மனச்சஞ் சலம்

—ஜோஸ்யர்


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


★ காதல் தொடர்பில்

# தமிழீழ சட்ட பிரிவின் கண்ணோட்டம்

[விடுதலைப் புலிகள் நீதி நிர்வாகத் துறை நடுவப் பணியகம் காதல்தொடர் பான தமிழீழ சட்டப் பிரிவு தொடர்பாக விடு த்த அறிக்கை இங்கு தரு கின்றோம்.[

இன்றைய நவநாகரீக உல கில் ஒரு ஆணும், பெண்ணும் இன, மொழி, சாதி சமய வேறுபாடு இன்றியும் வயது வேறுபாடு இன்றியும் ஒரு பெண் அல்லது ஆண் தமக்கு ஏற்ற ஒரு பெண்ணையோ, ஆணையோ காதலிப்பது சாதா ரண நிகழ்வாகும். இந்நிகழ் வானது தமிழீழத்தில் மட்டு மன்றி வளர்ச்சியடைந்த நாடு களிலும், வளர்முக நாடுகளி லும் நாம் சாதாரணமாக அவதானிக்கக்கூடியதாக உள் ளது. பொதுவாக எந்த ஒரு நாட்டிலும் காதலிப்பது குற்ற மில்லை. அக்காதலின் முறி வுக்கு உரிய மான நட்டத் தையே பெறலாம். ஆனல் தமிழீழ சட்டத்தைப் பொறு த்தவரை ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ காதலிப்ப தாக வாக்குறுதி கொடுத்து தகுந்த காரணம் காட்டாமல் அவ்வாக்குறுதியை நிறை வேற்ருவிட்டால் அச்செயலா னது ஒரு குற்றமாகும். இப் பிரிவானது போர்க்கால சூழ் நிலையிலும், சமூக நிலமை களில் இருந்தும் புத்துயிர் பெற்றது. எந்த ஒரு குற்றவி யல் வழக்கும் நியாயமான சந் தேகத்திற்கப்பால் (Beyond Reso ble Dovbt) எதிரியே அக்குற்றத்தைச் செய்தாரென நிரூபிக்கவேண்டும். இந்த வகையில் வாக்குறுதி முடிவு களின் அடிப்படையில் எழு கின்ற காதல் பிணக்குகளை குற்றப் பிரிவுகளில் அடக்கி எதிரியே அவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினர் என நியாயமான சந்தேகத்திற்கப் பால் நிரூபிப்பது எல்லோரா லும் முடியாத ஒன்ருகும்.

உலக நீதிக் கோட்பாடு களின்படி குற்ற வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நியாயமான சந்தேகத்திற்கப் பால் நிரூபிக்கப்படவேண்டும் என்று கூறுவது யாதெனில் ஆயிரம் குற்றவாளிகள் தப்பி னலும் ஒரு நிரபராதி தண்டிக் கப்படக்கூடாதுஎன்றபொதுக் கருத்தின் அடிப்படையிலே ஆகும். தமிழீழ நீதிமன்று களின் கணிப்பீட்டின்படி ஆயி ரம் குற்றவாளிகள் தப்பிக்க வும் கூடாது, ஒரு நிரபராதி தண்டிக்கப்படவும் கூடாது. சமூக யதார்த்தத்தின் அடிப் படையில் காதலித்துக் கைவி டல் எனும் குற்றப்பிரிவு தமி ழீழ சட்டத்தில் ஏற்பாடாக வுள்ள போதிலும் அவ்வுரி மையை மக்கள் உரிய முறை யில் கையாள முனைவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் சட்டமானது உரிமைகளை வழங்குகின்றது. அவ்வுரிமை களில் ஒவ்வொருவரும் அக் கறையுடன் செயற்பட வேண் டும். காதலானது பலவடிவங் களில் இன்றைய சமூகத்தில் காணக்கூடியதாகவுள்ளது. சில காதல்கள் பெற்றோராலோ அல்லது அதற்கு உரியவர்க ளாலோ அங்கீகாரம் பெற்றுத் தொடர்கிறது.

ஆனல் சிலகாதல்கள்இதற்கு முற்றிலும் முரண்பாடாக யாருக்கும் தெரியாமல் அவ் இருவரும் மட்டுமே அறியக் கூடியதாகவுள்ளது. இப்படிப் பட்ட பிரச்னைகளே மிகவும் சிக்கலானதாகும். காதல் தொடர்பில் தமிழீழ சட்டப் பிரிவு திருமண ஏமாற்றம்(அ) எனும் பகுதி தனது உள்ளடக் கத்தை வெளிக்காட்டுகையில் பின்வருமாறு கூறுகின்றது. காதலித்த பின்னர் கைவிடு வது என்ருல் சமுதாயத்திற்கு குறிப்பிட்ட காதலைப் புரிந்த ஆணும்,பெண்ணும் திருமணம் முடிந்து வாழப்போகிருர்கள் என்றுநம்பக்கூடியவாறுகாதல் புரிந்தவர்களில் ஒருவர் திரு மண வாக்குறுதியை மீறினல் அது காதலித்த பின்னர் கைவிடுதல் என்ற குற்றமா கும். இப்பிரிவானது இப்படி விளக்கியுள்ள போதிலும் எல் லாக் காதலும் சமுதாயம் நம் பும் அளவிற்கு நடந்துள்ளது என நிரூபிக்கமுடியாது. இது இன்றைய யதார்த்தமும்கூட. தமிழீழ நீதிமன்றுகள் 1993-08-21ல் ஆரம்பிக்கப் பட்டு 1994-08-62ம் திகதி வரை அவதானித்த வழக்கு களில் காதலித்துக்கைவிடுதல் குற்றமே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இதன் போது பாதிக்கப்பட்டவர் களில் பெரும்பாலானேர் பெண்களே ஆகும். சில பெண் கள் தமது காதலின் அடிப் படையில் காதலன் தன்னை ஏமாற்றுவான் எனத் தெரிந்து கொண்டதும் தமது காதலை நிரூபிப்பதற்காக சகல சான்று களையும்தன்னகத்தேகொண்டு வந்து மன்றைத் திருப்திப் படுத்தும் அளவிற்கு தனது சாதுரியமான புத்தி வன்மை யால் தன் பக்க வாதத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தி சமுதாயத்திற்கு வழி காட்டிச் செல்கின்றனர். ஆனல் மறுபுறம் ஒரு ஆடவ னல் காதலிக்கப்பட்டு ஏமாற் றப்பட்டு நீதிமன்றில் வந்து நிற்கும் ஒரு பெண் தனது காதலை நிரூபிக்கும் எந்த வொரு சான்றையோ அல்லது ஊகித்து அறியக்கூடிய அளவி லான கூற்றையோ கூற முடி யாது தவிப்பதை நேரடியாக காணக் கூடியதாக உள்ளது. தமிழீழத்தில் பொதுவாக பெண்கள் ஆயினும்சரி, ஆண் களாயினும்சரி தங்களுக்கு வழங்கிய உரிமையை மிகவும் அக்கறையுடன் கையாள தமி ழீழ சட்டங்களை அறிந்து கொண்டு செயற்படுவோம். (ரி)

## உதைபந்தாட்டம் : சென்பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கும் - சென். ஜோன்ஸ் கல்லூ ரிக்குமிடையில் நேற்று நடை பெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் முதல் பிரிவில் சென். பற்றிக்ஸ் 3-2 கோல் கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு முன்பு நடைபெற்ற பி-பிரிவு ஆட் டத்தில் சென். ஜோன்ஸ் கல் லூரியும், ஸி-பிரிவு ஆட்டத் தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி யும் வெற்றிபெற்றன. -வி-இ


நினைவுப் பேருரை

காலஞ்சென்ற சிறுவர் வைத்திய நிபுணர், வைத்திய கலாநிதி அ. சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

ஆர்வலர்கள் அனை வரும் அன்புடன் அழைக் கப்படுகின்றனர்.

பேருரை விடயம் : ''யாழ்ப்பாணத்தில் சிறுவர்களின் ஆரோக் கிய நிலை''

பேருரை வழங்குபவர் : சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி வி. எம். கருணாகரன் (முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் )

பதிவாளர்.

(ஏ-4447)


## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். வண்ணை கன்ன திட்டி ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானத்தில் இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் பூசையும் மாலை 6 மணிக்கு சிறப்பு ருத்திரா பிஷேகமும் அலங்கார பூசை வழிபாடுகளும் நடைபெறும். (154)

0 0

(கொழும்புத்துறை)

ஐக்கிய நாடுகள் தினத்தை யொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி,பேச் சுப் போட்டிகளை இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமையும், 22-ம் திகதி சனிக்கிழமையும் நடத்தவுள்ளனர். (154)

## 2-ம்கட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வர்.

பிரதமர் சந்திரிகா பண் டாரநாயக்க குமாரணதுங்க வின் செயலர் கே. பாலபட்ட பெண்டி, லயனல் பெர் ணண்டோ, ராஜன் ஆசீர் வாதம், நவீன் குணரத்தன ஆகியோர் முதல்கட்ட பேச்சு வார்த்தையில் அரச தரப்பில் கலந்து கொண்டது தெரிந் ததே. (இ)

## யாழ்ப்பாணத்தில்

(1-ம் பககத்தொடர்ச்சி)

உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ள தாகவும் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண மக்களுக்கு அத்தியாவசியபாவனை பொரு ட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் கூட்டுறவு துறைசார் ந்த பொருட்கள்தாராளமாக நியாய விலையில் கிடைக்கும் வகையில் இவ் ஏற்பாடு மேற் கொள்வப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளை நிறுவுவது சம்பந்தமா கக் கட்டிடம் ஒன்றை தேர்ந் தெடுப்பது குறித்து யாழ். அரச அதிபரின் ஆலோ சனையுடன் கூட்டுறவு மொத்த விற்பனவு திணைக்களம் நட வடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களை யாழ்ப்பா ணம் அனுப்புவதற்குபோக்கு வரத்துவசதிகள் யாவும் செய் யப்பட்டுவிட்டதாகவும் போதிய பொருட்களை மீள நிரப்புவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற சிறுவர்வைத் தியநிபுணர் கலா. நிதி அ. சிவ பாதசுந்தரம் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலைஅரங்கில் நடைபெறும். (க-இ)

## 40 தமிழ்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தரவு கிடைத்தாலே மேற்படி 40 சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்படுவர் என களுத் துறை சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் எதுவித காரணமும் இன்றி தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் விடு விக்கப்படுவார்கள் என நீதி அமைச்சர்பேராசிரியர்ஜி. எல். பீரிஸ் தெரிவித்த பிற கும்கூட கைதிகள் விடுவிக்கப் படவில்லையாம்.

மகசீன் சிறைச்சாலையில் மட்டும் 200 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. -க-இ

## மின்சாரம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கேட்டறியும்,

மின்சார வசதிகளையும் தொலைத் தொடர்பு வசதிகளை யும் யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பொறியியலாளர் குழு ஒன்றை யாழ்ப்பாணம் அனுப்புவது குறித்தும் இரண் டாம் கட்டப் பேச்சுவார்த்தை யின்பேது கலந்தாலோசிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட் டது.

இவற்றுடன் யாழ்ப்பாண த்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் எதிர்வரும் திங்கள் நடை பெறும் பேச்சுவார்த்தை களில் விரிவாக ஆராயப்படும் எனவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (இ)

## புலிகளுடன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டப் பேச்சுவார்த்தை களின்போது யுத்தநிறுத்தம் பற்றி விடுதலைப்புலிகளின் பரிந்துரைகளை அறிந்து கொள்வதுடன் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை, எவ்வாறு உயர்த் துவது என்பது பற்றிய பேச்சுக்களே நடைபெறும்.

ஆனல் யுத்தநிறுத்தம் பற்றி உடனடியாக எந்த ஒரு முடிவும் எடுக்கப்படமாட் டாது. ஜனதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்பே, யுத்த நிறுத்தம் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினர். (வி-இ)


தெல்லிப்பழை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

பன்னிரண்டு ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

காலம்: 23-10-94 ஞாயிறு

நேரம்: பிற்பகல் 3-00 மணி

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்

நிர்வாகசபை

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

18-10-94. (சி 1271)

‘சிறுவர் போஷாக்கு பூங்காமூலம்

# தலைவரின் நோக்கம் இன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது

(யாழ்ப்பாணம்)

எமது குழந்தைகள் எதிர் காலத்தில் நல்ல ஆரோக் கியமான, அறிவுள்ள சமு தாயமாக வளரவேண்டும் என்கின்ற எமது தேசியத் தலைவரின் ஆலோசனைகளுக் கமைவாக சிறுவர்போஷா க்குப் பராமரிப்புப் பூங்கா க்கள் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட சிறுவர் போஷாக்குப் பராமரிப்புப் பூங்கா . சிறுவர்களுக்கிடை யிலான விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் உரையாற் றுகையில் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறிய தாவது:- ‘‘போஷாக்கு நிலையங்களை ஆரம்பிப்பதன மூலம் எமது குழந்தை களின் நலன்களைக் கவனிப் பதோடு நல்ல ஆரோக்கிய மான ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தன் தேவையை உணர்ந்த எமது தேசியத் தலைவர் இதற்கான முயற்சிகளை ஆரம்பிக்குமாறு எமக்குப் பணித்தார். அவ ருடைய இந்த நல்ல திட் டம் இந்தக் குழந்தைகளில் இருந்து இன்று நிரூபிக்கப் பட்டுள்ளது.

‘‘நாம் இன்று ஒரு போர்க் கால சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சிறி லங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை களால் எமக்குநல்ல போஷாக் குள்ள உணவுப்பொருட்கள் கிடைப்பதில்லை, மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு இந்த வகையான திட்ட மிட்ட செயல்களால் எதிர் காலத்தில் ஒரு நலிந்த சமு தாயம் உருவாகுமென அரசு திட்டமிட்டது. அர சின் இந்த நயவஞ்சகத் தனமான திட்டத்தை உடை த்தெறியும் பொருட்டும், எமது வருங்காலச் சந் ததிகளை இந்த அவல நிலை யிலிருந்து பாதுகாத்துக்

## தமிழ்ச்செல்வன் உரை

கொள்ளவேண்டும். இவர்கள் நல்ல அறிவுள்ள ஆரோக் கியமான பிரஜைகளாக வளர்த்தெடுக்கப்படவேண் டும் என்பதே எமது தலை வரின் நோக்கமாகும் என் றும் தெரிவித்தார்.

இப்போட்டியில் பங்கு கொண்ட ஒன்பது பூங்காக் களின் சிறுவர்களுக்கான விளையாட்டுக்களில் யாழ். பொம்மைவெளி சிறுவர் பராமரிப்புப்பூங்கா 90 புள்ளி களைப்பெற்று முதலாமிட த்தையும் நவாலி சிறுவர் பூங்கா81 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் துன்னாலை சிறுவர் பூங்கா 79 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தட்டிக்கொண்டன.

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்கினார். 162-ரி

# 1995ம் ஆண்டிற்கான விடுமுறை நாட்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் நாட்காட்டி வெளியிடும் சகல நிறுவ னங்களும் 1995ம் ஆண்டு நாட்காட்டியில் இதன் கீழ் குறிப் பிடப்படும் மாதங்களில் வருகின்ற தினங்களுக்கு மட்டுமே விடுமுறை நாட்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதென் பதனை கவனத்தில் கொள்ளவும். இவை தவிர்ந்த ஏனைய விடுமுறை நாட்கள் வலுவிழந்ததாகவே கருதப்படும் என தமிழீழ நிர்வாகசேவை அறிவித்துள்ளது,

ஆங்கில திகதிகள்

| | | | |
|---|---|---|---|
| தைப்பொங்கல் | ஜனவரி | 15 | ஞாயிறு |
| மகாசிவராத்திரி | பெப், | 27 | திங்கள் |
| றம்ழான் | மார்ச் | 03 | வெள்ளி |
| பெரியவெள்ளி | ஏப். | 14 | வெள்ளி |
| புதுவருடப்பிறப்பு | ஏப். | 14 | வெள்ளி |
| சித்திரைப் பௌர்ணமி | ஏப். | 15 | சனி |
| அன்னைபூபதி நினைவு நாள் | ஏப். | 19 | புதன் |
| மேதினம் | மே | 01 | திங்கள் |
| ஹஜ்ஜிப் பெருநாள் | மே | 10 | புதன் |
| விசேட வங்கி விடுமுறை | யூன் | 30. | வெள்ளி |
| கரும்புலிகள் நாள் | யூலை | 05 | புதன் |
| ஆடி அமாவாசை | யூலை | 27 | வியாழன் |
| தியாகி திலீபன் நினைவுநாள் | செப். | 26 | செவ்வாய் |
| மாலதி நினைவுநாள் | ஒக். | 10 | செவ்வாய் |
| தீபாவளி | நவ. | 06 | திங்கள் |
| மாவீரர்நாள் | நவ. | 27 | திங்கள் |
| நத்தார் | டிச. | 25 | திங்கள் |
| விசேட வங்கி விடுமுறை | டிச. | 31 | ஞாயிறு |

துர்க்காபுரம் மகளிர் இல்ல

# 12 ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவும் பரி சளிப்பு நிகழ்வும் இம்மாதம் 23-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தில் விசேட பூசையும் இராம நாதன் கல்லூரியில் பரிசளிப்பு நிகழ்வோடு. ஆரம்பமாவுள் ளது.

விழாவுக்கு துர்க்கா துரந் தரி செல்வி தங்கம்மா அப் பாக்குட்டி தலைமை வகிக்கின் றார். முதன்மை விருந்தின ராக பரதிக் கல்விப் பணிப் பாளர் சு. இரத்தினராசாவும் சிறப்பு விருந்தினராக நா. வேதநாயகனும் பங்கு பற்று கிறார்கள்.

ஆசியுரையை ஸ்ரீ ல ஸ்ரீ (ச மசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரரும் பரிசளிப்பு (டருரையை ஆறு திருமுருக னும் நிகழ்துகிறார்கள். பொன் விழாக் கண்ட அருட் கவிகா ஸ்ரீ ஐஸ்வரி அம்மையா ருக்கு பாராட்டும் பொற்கிழி (ழ கலு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற இருக்கின்றன. (ம)

டாக்டர் பொன்னம்பலம்

# வைத்திய நிபுணர் மட்டுமல்ல சீரிய சிந்தனையாளருமாவார்

நினைவஞ்சலியில் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்தவேளை யில் உறுதியுடனும், தன்னம் பிக்கையோடும் சுறுசுறுப்பாகக் கடமையாற்றியுவர்களின் வரி சையில் சத்திரசிகிச்சை நிபு ணர் வைத்தியகலாநிதி சுப் பிரமணியம் பொன்னம்பலத் திற்கு தனியிடமுண்டு.

யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற டாக் டர் பொன்னம்பலம் நினைவஞ்சலிநிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலா நிதி செல்வி நவமலர் கனகரத் தினம்இவ்வாறுதெரிவித்தார்.

வைத்திய கலாநிதி சுப்பிர மணியம் பொன்னம்பலத்தின் உருவப்படங்கள்யாழ்போதனா வைத்தியசாலை சத்திரசிகிச் சைப் பிரிவிலும் வாசிக சாலையிலும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

செல்வி நவமணி கனகரத் தினம் தொடர்ந்துஉரையாற் றுகையில் டாக்டர்பொன்னம் பலம் ஓர் உயர்ந்த வைத்திய நிபுணர் மட்டுமல்லாது சீரிய சிந்தனையாளராகவும் சங்கீத ரசனை உள்ளவராகவும் திகழ்ந் தார். இவருடைய மேலான பார்வையும் சுறுசுறுப்பான சேவையும் எல்லோரையும் கவர்ந்துள்ளது என்றார்.

யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீடாதிபதி பேராசிரியர் பரமேஸ்வரன் உரையாற்று கையில் எமது மருத்துவ இளை ஞர்கள் முக்கியமாக அமரர் பொன்னம்பலத்தின் வாழ் க்கை நெறியைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்றார்.

சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கணேசரத் தினம், கலாநிதி வி. எஸ். சிவ குமாரன்,குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி வி.என். கருணாகரன், வைத்திய கலாநிதி பேராசிரி யர் பாலசுப்பிரமணியம்’ வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

பொன் ஒளிமலர் நினைவஞ் சலிமலர் இந் நிகழ்வின்போது வெளியிடப்பட்டது குறிப் பிடத்தக்கது. 162-ரி

# சனத்தொகை அளவுக்கேற்ப உற்பத்தி பெருகவேண்டும்’’

## உலக உணவு தினத்தில் கோரிக்கை

(உடுவில்)

‘பெருகி வரும் சனத் தொகையின் அளவுக்கேற்ப உணவு உற்பத்திகளும் அதி கரிக்கப்பட வேண்டும். உணவு உற்பத்தியின் உறைவிடங்கள் கிராமப்பகுதிகளாக இருப்ப தால் நாம் கிராமப்புறபாட சாலை ஒன்றில் மரத்தினை நட்டு உணவுற்பத்திக்கு ஊக்க மளிக்க முன்வந்தோம்.’’

உலகஉணவு தினத்தை முன் னிட்டு இலங்கை வங்கியால் நடத்தப்பட்ட மரம் நாட்டு விழா ஒன்றில் சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையா ளர் திரு. எஸ். விக்கினராசா மேற்கண்டவாறு கூறினார்.

கந்தரோடை தமிழ்க்கந் தையா வித்தியாசாலையில் மாமரக் கன்றினை நட்டுவைத்து அவர் உரையாற்றினார். பாட சாலை விவசாயக் கழக தலைவர் செல்வன் து. சுதாகரன் தலை மையில் இவ்வைபவம் நடை பெற்றது.

அவர் மேலும் கூறியதா வது:

எமது பிரதேசத்தில் சனத் தொகை குறைவாக இருந்த காலத்தில் பொருளாதார தன்னிறைவு நிலை காணப்பட் டது. சனத்தொகை பெருகி யுள்ள இக்காலத்தில் நாம் வெளிநாட்டு பொருளாதா ரத்தில் தங்கி இருக்கிறோம். இந்நிலை மாறி எமது உணவு தேவையை நாமே பூர்த்தி செய்ய வேண்டும். கிராமங் கள் தோறும் உணவு உற் பத்தி முயற்சிகள் துரிதப்படுத் தப்படவேண்டும். மரத்தின் முக்கியத்துவத்தை மாணவர் உணர்ந்து செயற்பட வேண் டும். இலங்கை வங்கி சுன்னா கம் கிளையின் கடன் வழங்கு உத்தியோகத்தர் திரு. சிவரட் ணம் உரையாற்றுகையில் கூறியதாவது: உணவில் தன் னிறைவைப் பெறவும் பொரு ளாதார வளர்ச்சி பெறவும் எமது வங்கி பல கடனுதவி களை வழங்கி வருகின்றது. சுய தொழில்களை ஊக்குவிக்கவும் வேலையற்ற படித்த இளம் வயதினர் உற்பத்தித்துறையில் ஈடுபடவும் என நாம் கடன் வசதிகளை அளிக்கின்றோம். கோழிவளர்ப்பு, மாடுவளர்ப்பு நீர்இறைக்கும் இயந்திரங்களை வாங்கி உற்பத்தியில் ஈடு படுத்தல் என பல்வேறுதேவை களுக்கும் கடன் வழங்குகி றோம். இக்கடன்களை பெற்று எமது தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டும். திரு. பொன். பாலகுமார், க. செல்வகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (109)

# “எமது கல்வியின் தரத்தை நாம் உயர்த்தவேண்டும்’’

யாழ். பல்கலைக்கழக பதிவாளர்

(சாவகச்சேரி)

போர்ச்சூழ்நிலையில் எவ் வளவு தூரம் கஷ்டங்கள் இருந்தாலும் கூட எமது கல்வியின் தரத்தை என் றும் நாம் உயர்த்த வேண் டும். நாம் இதில் உண்மை யான அக்கறை செலுத்த வில்லையென்றால் இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டி யிருக்கும்.’’

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடை பெற்ற பரிசில் நாள் விழா வில் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ் வரன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற் றும் போது தெரிவித்தார்.

கல்லூரியின் அதிபர் க. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து தமது உரையில் கல்வி சார்ந்த. சாராத விடயங்களில் இவ் வாறான பரிசளிப்பு விழாக் கள் மாணவர்கள் மத்தியில் ஊக்கத்தையளிப்பதாக இருக் கின்றது. அவர்கள்பல துறை களிலும் ஊக்கிவிக்கப்பட வேண்டும்.

போட்டி தன்மை ஒரு வரை ஒருவர் புரிந்து கொள் கின்ற நிலைமை. விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை தோல்வியை இயல்பாகவே ஏற்றுக்கொள்ளுதல், வெற்றி யைச் சாதாரணமாகவே ஏற் றுக்கொள்ளுதல் என்பன மாணவர்கள் மத்தியில் இயல் பாகவே பதிகின்றன.இதனால் சமூகத்தில் வெற்றியேற்பட் டாலும். வாழ்க்கையிலே தோல்வியேற்பட்டாலும் அதைச்சமமாக ஏற்றுக் கொள்கின்ற தன்மை சிறு வயதில் இருந்தே புரிந்து கொள்ளக்கூடியதாக இருக் கின்றது. எமது பிரதேசத் தில்கல்வி எவ்வளவோ தூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத்தெரியும் மண் ணெண்ணைத்தட்டுபாடு, மின் சாரவசதியின்மை’ போர்க் காலசூழல், பயந்தநிலை, நிர ந்தரஇருப்பிட வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை இவற்றிற்கு மத்தியிலும் எமது கல்வியை அதிபர், ஆசிரியர் கள்: மாணவர்கள். திணைக் களங்கள் முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

இப்படியான சூழலிலும் எமது மாணவர்கள் கல் விகற் கின்றார்கள் தேசிய ரீதியில் போட்டியிடுகின்றார்கள் என்ற ஒரு மனத்திருப்தி ஏற்படுகி றதே ஒழிய பெறுபேறுகளைப் பார்க்கின்றபொழுது அது திருப்திகரமாக அமையவில்லை என்றும் கூறினார். (155-ரி)

## போதை வஸ்து கடத்த முயற்சி

(கொழும்பு)

150 கிராம் கெரோயின் போதைப் பொருளை இலங் கைக்குள் கடத்த முயன்ற வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில்நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

இப்போதைப் பொருளின் பெறுமதி சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவாகும். (க-சி)

# யாழ்ப்பாணத்தில் 'செப்ரிசிமியா' மரணங்கள்

[யாழ்ப்பாணத்தில் செப்ரிசிமியா நோயினால் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதன் காரணத்தை அறியும் முகமாக மருத்துவ பீடத்தில் பரீட்சைகளை நடாத்த கொழும்பிலிருந்து வந்த பீடத்தின் இடை வருகை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை கடந்த இரண்டு வாரங்களாக இது சம்பந்தமாக ஆய்வொன்றினை மேற்கொண்டு தயாரித்த அறிக்கை இங்கு தரப்படுகிறது.]

இக்கட்டுரையாளரின் யாழ் வருகையில் யாழ். மருத்துவர்களுடன் உரையாடியபோது அவர்களுள் பலர் செப்ரிசிமியா மரணங்கள் நிலவுவதை எடுத்துரைத்தனர். இம்மருத்துவர் கூற்றின்படி நெருப்புக் காய்ச்சல் குணத்துடன் நிலவும் நோய் நிலவுவதாகவும், நெருப்புக் காய்ச்சலுக்காகப் பாவிக்கப்படும் அம்பிசிலின், குளோறம் பினிக்கோல் ஆகிய நுண்ணுயிர்க் கொல்லிகளினால் இந்நோய் குணமாவதில்லை என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இத்துடன் மலேரியா நோய் பரவுவதாகவும், சில வேளைகளில் மலேரியா நோயுடன் நெருப்புக் காய்ச்சல் இணைப்பும் பல நோயாளிகளிடம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செப்ரிசிமியா என்று கூறும்போது அது நோய்க் குணங்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு முடிவே. செப்ரிசிமியாவிற்கு பல நுண்ணுயிரினங்கள் காரணியாக அமைகின்றன. இக்காரணிகள் யாவை என இனங்கண்டு சிகிச்சை முறை கையாள்வதே விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது. ஆய்வுகூட உதவியின்றி இம்முறை இங்கே கையாள முடியாத நிலை இருந்தது. செப்ரிசிமியாக் குணங்கள் குலைப்பன் காய்ச்சல், நடுக்கம், உடல் இயக்க அதிர்வு, தேகமெங்கும் முறிவுற்றது போன்ற உணர்வு தடுமாற்ற மனப்பான்மை ஆகியன.

மேற்குறிப்பிட்ட குணங்களைத் தருவன வைரசுக்கள், பற்றீரியக்கள், பங்கசுக்கள், புறட்டசோவாக்கள் ஆகியவற்றுடன் இவற்றால் வெளியேற்றப்படும் தொட்சின்கள் ஆகிய நச்சுப் பொருட்களுமாகும், இனங்காணப்படா செப்ரிசிமியாக்கள் அவற்றிற்கென இனங்காணப்படா நுண்ணுயிர்க் கொல்லிகளினால் சிகிச்சை பெறு. இவற்றிற்கு ஆகவேண்டிய ஆய்வுகூட வசதிகள், தகுந்த நிபுணத்துவமும் அனுபமின்மை ஆகியன யாழ்ப்பாணத்தில் அமையர்மை வருத்தத்திற்குரியனவாகும். இருந்தும் யாழ். மருத்துவபீடத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி இக்கட்டுரையாளர் ஆய்வுகளை மேற்கொண்டார். இதன் பயனாகச் சில மருத்துவ துப்புக்கள் துலங்கின.

செப்ரிசிமியா என மருத்துவர்களால் கொள்ளப்பட்ட நோயாளரின் இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. யாழ். மருத்துவபீட நுண் உயிரியல் ஆய்வுகூடத்தில் இவ் ஆய்வு நடாத்தப்பட்டது. நுண் உயிர் வளர்ச்சி ஊடகங்களில் இரத்தத்துள் நுண் உயிர்கள் இருப்பின் அவற்றினை வளர்க்கும் முகமாக ஊடகங்களுக்குள் இரத்தம் செலுத்தப்பட்டது. பின்னர் அவற்றினின்று பெறப்படும் நுண் உயிரினம், நுண்உயிர்க் கொல்லித் தட்டுகள் பாவித்து எவ்வெவ் பற்றீரியங்கள் எவ்வெவ்வகையான நுண்ணுயிர்க்கொல்லி களினால் அழிக்கப்படுவன என்று வகை காணப்பட்டன.

இம்முறையினால் செப்ரிசிமியாக்கள் இரு வகையாக அமைந்துள்ளமை காணப்பட்டது. முதலாம் வகை பெரும்பாலும் சிறு பிள்ளைகளிடம் காணப்பட்டது. இக்கிருமிகள் ஸ்டபிலோக் கோக்கசு, அலுபசு, மைக்குறோ கோக்கசு ஆகும். இவை எக்காலத்தும் சாதாரண உடல்நலமுடையோரைத் தாக்குவதில்லை. உடல் நலக்குறை, போஷாக்கின்மை, கிருமி எதிர்ப்புச்சக்தியின்மை உடையோரே இக்கிருமிகளாற் தாக்கப்படுவர். இந்நோயாளரைச் சிறுவர் வார்ட்டில் பார்வையிட்டபோது இவர்கள் போஷாக்கின்மையிலும், தேகமெலிவு உடையோராயும் காணப்பட்டனர். இவர்கள் கண்கள் குழிகளாக காணப்பட்டன. நெஞ்சில் எலும்புக்கூடு துலங்கி இருந்தது. வயிறு மட்டும் பானை வயிறாய் உடம்பிலுள்ள ஏனைய பகுதிகளைவிடப் பெரியனவாய் இருந்தன. கால்கள் சோர்ந்து இருந்தன. இவ் வாட்டில் அனுமதி பெறும் சிறார்களுள் 50%த்தினர் இவ்வாறானவர்களே எனச் சிறுவர் வைத்திய நிபுணர் தெரியத் தந்தார்.

இச்சிறாரைத் தாக்கும் இந்நோய்க்கு உகந்த நுண் உயிர் கொல்லிகள் சாதாரண நோய்க்குப் பாவிப்பனவற்றுக்கு வேறானவை ஆக ஆய்வுகள் காட்டின. இவை கிலின்டாமைசின் நோர்புளொக்சசின் சிப்புறோபுளொக்சசின் ஆகியயன என ஆய்வுகள் தெரியத் தந்தன. 1973, 1974 ஆகிய காலங்களில் இலங்கை முழுவதிலும் போஷாக்கின்மையே மரணத்திற்கு முதற் காரணமாய் அமைந்திருந்தது. அவ்வேளையிலும் யாழ். மக்கள் பாதிப்புறவில்லை. இதன் காரணம் உணவுத் தட்டுப்பாடு இங்கு நிலவாது இங்கு கமத்தொழில் விருத்தியால் தன்னிறைவு இருந்தமையேயாகும். ஆனால் இப்பொழுதோ உரமின்மை, மின்சாரமின்மை, எரிபொருளின்மை இவற்றை ஒட்டிய நீர்ப்பாசன வசதியின்மை ஆகியன நிலவுகின்றன. இந்நோய்க்கு சிகிச்சையிற் தங்காது வருமுன்னர் காப்பதே மேலானது. எனவே உணவுப் பொருள் உற்பத்தியிற் கவனஞ் செலுத்துவது மிக அவசியம்.

அடுத்து இரண்டாம் ரகமான செப்ரிசிமியாவை நோக்குவோம். இது சகல வயதினரிடையேயும் தோன்றுகின்றது. ஆரம்ப குணம் நெருப்புக்காய்ச்சல் போலோ மலேரியா போலோ தோன்றுகின்றது. ஆய்வு பரிசோதனையின் போது இரத்தமூலம் பெற்ற நுண் உயிர்களுட் பெரும்பான்மையானவை சல்மனெல்லா டைட்பி என்ற நெருப்புக் காய்ச்சல் காரணிகளாகும். இவற்றை அழிக்கும் நுண் உயிர்க் கொல்லிகள் சாதாரணமாகப் பாவனையாகும் குளோறம் பினிக்கோல் அம்பிலிசின் ஆக அமையாது நோர்புளொக்சசின் சிப்புறோபுளொக்சசின் என்பவையாக ஆய்வுகள் தெரியத்தந்தன. இதன் காரணம் முறையற்ற பாவனையும், பாவிக்க வேண்டிய அளவிற்குக் குறைவாகவும், அம்பிசிலின், குளோறம் பனிக்கோல் ஆகிய நுண் உயிர்க் கொல்லிகள், சமூக வைத்தியரால் பெரும்பாலும் பாவிக்கப்படுவதாகும்.

இத்தகைய பாவனையால் கிருமிகள் இம் மருந்துவகை தம்மைத் தாக்காதிருக்கும் சக்தியை தாமாகவே வளர்க்கின்றன. இதற்கு இன்னோர் காரணம், மலேரியாத் தாக்கம் பெற்ற நோயாளி ஒருவரின் கலனூடாகப் பாதிப்பின்மை வீழ்ச்சியடைவதாகும். நெருப்புக் காய்ச்சல் உடலினுள் குணம் பெற கலனூடாகப் பாதிப்பின்மையே முக்கிய காரணமாகும். கலனூடக பாதிப்பின்மை வீழ்ச்சியால் நெருப்புக்காய்ச்சல் நோய் குறுகிய காலத்தில் மாறாது பல நாட்கள் நீடித்துக் காணப்படும். இப்போது பல நாட்கள் நோயாளிக்குக் குளோறம் பினிக்கோல் கொடுக்க வேண்டிய நிலை உண்டாகிறது. இதனால் அக்கிருமி தாக்கம் பழக்கப்பட்டு குளோறம் பினிக்கோலை எதிர்க்கும் சக்தி பெறுகின்றது. இதனாற் குளோறம் பினிக்கோல் பயனற்றதாகின்றது.

எனவே இந்நோயைக் குணப்படுத்த, முற்கூறிய நோர்புளொக்சசின் சிப்புறோபுளொக்சசின் ஆகிய மருந்துகளே பாவிக்கப்படல் வேண்டும். இம்முறையால் மரண வீதம் தவிர்க்கப்படலாம். குளோறம் பினிக்கோல் பாவனை நோய் பரவி வரும் சமூகத்தில் முற்றுமுழுதாகத் தடைசெய்யப்பட்டால், சில காலத்தின் பின் குளோறம் பினிக்கோல் சல்மனெல்லா டைபியை அழிக்கும் தன்மையை மீளப்பெறும். இவ்வகை கையாளப் பெறாதுவிடின், நோயாளியின் பராமரிப்புச் செலவு கூடுதலாக அமையும். சிப்புறோ புளொக்சின் சிறுருக்குச் சில தீய அசௌகரியங்களை விளைவிப்பதால் சிறுருக்கு நோர்புளொக்சசிமை மட்டுமே உபயோகத்தல் சிறந்தது. ஏனையோருக்குக் கூறப்பட்ட இரு மருந்துகளையும் பாவிக்கலாம்.

நோய் தடைக்கு குடிநீர்ச் சுத்தம், தனிமனித சுகாதாரம், மலசலகூடப் பாவனைகளுட் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். இத்துடன் மலேரியா நோய் மலதியன் பாவனையால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவேண்டும். (சி-இ)

---

# அரசியல் தீர்வு இன்றேல்

## பிரச்னை நீண்டுகொண்டே போகும்

### ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து அந்தப் பகுதியை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினாலும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு பேச்சு மூலமே அரசியல் தீர்வை எட்டலாம், இல்லாது போனால் பிரச்னை நீண்டுகொண்டே போகும், வருங்காலங்களில் இன்னொரு பிரபாகரன் தோன்றலாம்,

இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 'லங்கா தீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாமா? என்ற கேள்விக்கே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இந்தப் பேட்டியின் விபரத்தை கேள்வி பதில் வடிவத்தில் தருகிறோம்.

கேள்வி:- அப்படியென்றால் விடுதலைப் புலிகளின் பிரச்னை பயங்கரவாதப் பிரச்னையல்ல இனப்பிரச்னை என்று கூறுகிறீர்களா

பதில்:- இந்தப் பிரச்னைக்கு அரசியல் பின்னணி இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

கேள்வி:- சமாதானம் ஏற்பட்ட பின்புதான் அபிவிருத்தி செய்வதற்கு நாட்டில் பொருளாதார வலு இருக்கிறதா?

பதில்:- சமாதானம் ஏற்பட்ட பின்புதான் அபிவிருத்தியை மேற்கொள்ளவேண்டும். அதன் பின்பு அபிவிருத்தி செய்வதற்கு எங்களிடம் வளம் இருக்கிறது,

கேள்வி:- தொண்டமான் தேர்தல் பற்றி கூறுகிறார். அது பற்றி......

பதில்:- தொண்டமான் எந்த நேரமும் செயல்படுவது தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைக்காக இதை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். இந்த நாட்டில் தமிழர்கள் இருவெவ்வேறு பிரதேசங்களில் வாழ்கிறார்கள் ஒன்று மலையகம் தொண்டமான் தன்னிடமுள்ள வாக்குகளால் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுவருகிறார்.

கேள்வி:- எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தொண்டமானின் நிலைப்பாடு என்ன

பதில்: அவர் எடுத்துள்ள தீர்மானம் பற்றி எதுவும் எனக்கு தெரியாது

கேள்வி: பிரதமராக சந்திரிகா பதவியேற்ற பின்பு இந்தியப் பிரதிநிதிகள் இங்கு வந்துவடக்குக் கிழக்குபிரச்னை பற்றி பேசியுள்ளார்கள் அது பற்றி...

பதில்: எனக்கு தெரியாது. இந்திய அரசாங்கமோ சந்திரிகாவோ இது பற்றி ஒன்றும் கூறவில்லை

கேள்வி:- மக்கள் பிரதிநிதி என்ற முறையில் இதுபற்றிக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறதல்லவா

பதில்: புதிய அரசு பதவியேற்றவுடன் இந்திய அரசுப் பிரதிநிதிகள் இங்கு வந்து கலந்துரையாடி இருக்கிறார்கள். அவர்களை சம்பிரதாய பூர்வமாக நாங்கள் அழைக்கவில்லை

கேள்வி: புதிய அரசாங்கம் பதவியேற்றபின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் கொல்லப்பட்டவர்கள் பற்றி பெருமளவில் பேசப்படுகின்றதே அதுபற்றி

பதில்: மக்கள் வரலாற்றை புரியவேண்டும். 1989-ம் ஆண்டு யூன் மாதம் நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு கட்சித் தலைவரையும் அழைத்து கலந்துரையாடியபோது அந்தச் சம்பவத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார் அந்த நேரத்தில் எல்லோரிடமும் ஒரு பீதி நிலவியது. இந்த நேரத்தில்தான் ஜே. வி. பி. யை ஒழிக்க வேண்டுமென்று பேசப்பட்டது, ஸ்ரீமாவோவும் இசைந்திருந்தார், நீதியின் பிரகாரம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இராணுவத்திடம் பொறுப்புக்களை ஒப்படைக்கவேண்டும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது. அந்த நேரத்தில் படையினர் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்துமாறு கோரினர். அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இப்படியான வரலாற்றை நினைவு படுத்த வேண்டிய அவசியம் இல்லை, ஸ்ரீமாவோ இது பற்றி மிகவும் நன்றாக தெரிந்திருந்தார்.

கேள்வி: ஏ. ஜே. ரணசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதின் பின்னணியில் தாங்கள் இருப்பதாக கூறுகிறார்கள் அதுபற்றி.

பதில்: இல்லை. அவர்தேர்தலில் போட்டியிடுவது அவரது சொந்த விருப்பமாகும் எனக்கும் அதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

கேள்வி: கடந்த அரசாங்கம் அந்தக் காலங்களில் பிழையான வழிகளில் சென்றுள்ளதா?

பதில்: எந்த அரசாங்கம் பிழையின்றி நடந்திருக்கிறது.

(ம - சி)

---

திருடப்பட்ட

# நீரிறைக்கும் யந்திரம் மீட்பு இருவர் கைது

(உடுவில்)

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியை சேர்ந்த நபர் ஒருவர் தமது இருபது ஆரயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று களவுபோய்விட்டதாக செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து புலன் விசாரணைகளில் ஈடுபட்ட சுன்னாகம் காவல்துறையினர் சந்தேகத்தின் மீது தாவடியைச்சேர்ந்த இரு நபர்களை கைதுசெய்துள்ளனர்.

விசாரணைகளின்போது இவர்களிடம் இருந்து களவுபோனதாகக் கருதப்படும் நீர்இறைக்கும் இயந்திரம் கைப்பற்றப்பட்டது. -190

---

உடுவல் பிரதேச செயலகத்திற்கு

# 4,800 பேர் வேலை தேடி விண்ணப்பித்துள்ளனர்!

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக வேலைவாய்ப்புப் பிரிவில் நாலாயிரத்து எண்ணூறுக்கும்அதிகமானோர் வேலைவாய்ப்புத் தேடி விண்ணப்பித்திருப்பதாக உடுவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. க. தேவராஜன் தெவித்துள்ளார்.

நிதிதிட்டமிடல் இனவிகிதாசார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் மனிதவளங்கள் சம்பந்தமான வேலையற்றவர்களுக்கான தகவல்கள் ஒவ்வொரு பிரதேசசபைகளின் திட்டமிடல் பிரிவினரால் தற்போதுதிரட்டப்பட்டு வருகின்றது.

இதற்கமைய இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வேலைவாய்ப்புக்களைப் பெறத்தகுதியானவர்களிடம் இருந்து பூரண தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததாகவும், கடந்த 10-ம் திகதி வரை 4825 விண்ணப்பப்படிவங்கள் தமக்கு வந்துசேர்ந்திருப்பதாகவும் திரு. த. தேவராஜன் தெரிவித்தார்.

109-ரி

மணிவாக்கு

சந்தர்ப்பங்களைப் புரிந்து தலை வணங்காமல் போனால் சந்தர்ப்பங்களே நம்மை தலை வணங்க வைக்கும்.

- ருஸ்சே

# நமது நோக்கு

## அக்கினிக்கா ஆகுதி?

எரிந்த யாழ். நூல் நிலையத்தைப் புனரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மதிப்பீட்டுக் குழு ஒன்று விரைவில் வர இருப்பதாகவும், வீடமைப்பு அமைச்சர் சிறிபால டி சில்வாவின் நேரடிக் கண்காணிப்பில் புனரமைப்பு நடைபெறும் எனவும் செய்தி வந்துள்ளது.

இதற்கான அமைச்சரவைத் தீர்மானமே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

4-6-1981ல் மாவட்ட சபைத் தேர்தல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தேர்தலைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள ஆளும் கட்சியாக இருந்த ஐ. தே. க. சில மறைமுகச் சதி வேலைகளில் இயங்கியதாகவும், சில நடவடிக்கைகள் எடுத்ததாகவும் பரவலாகப் பேசப்பட்டது.

1-6-1981 இரவில் யாழ். நூலகம் எரிக்கப்பட்டதும் அத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

தமிழ் மக்களின் பண்பாட்டுச் சொத்தான, 95,000 நூல்களைக் கொண்ட யாழ். நூல்நிலையம் அக்கினிபகவானுக்கு ஆகுதியாக்கப்பட்டது.

தேடக் கிடைக்காத பல சுவடிகள், வேறு பிரதிகளே இல்லாத அருமந்தன்ன நூல்கள் சில மணி நேரத்திற்குள் எரிந்து சாம்பராகின.

பிரதிபண்ணி வைக்கும் சாதனங்களே கிடைக்காததால் அவற்றின் பல பிரதி எடுத்து வைத்திருக்க முடியாத பரிதாப நிலையில் இது அழிந்தது தமிழ்ச் சமுதாயத்திற்குக் கொடுத்த பலத்த அடி என்பதை எவர் தான் மறுக்கக் கூடும்?

இதுபற்றி அயன் குணதிலகா என்ற சிங்களக் கனவானே MIRGE என்ற சமாதானம் விரும்பும் ஒரு நிறுவனத் தலைவருக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டது என்ன?

''யாழ். மக்களின் உணர்வை உறைய வைக்கும், திட்டமிட்ட சதிகார வேலையே இத்தீவைப்புச் சம்பவம்!'' (Act of cold blooded, calculated incendiarism of the splendid Jaffna library is the most wounding to the Sensibility of the brothers in the North.)

இதனைச் செய்த சதிகாரர்பற்றிய தகவல்களும் தோண்டி எடுத்து வெளிக்கொணர வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறோம்!

# லஞ்சம், ஊழல், வன்செயல்களை ஒழிப்பதே எமது குறிக்கோள்

## பிரதமர் சந்திரிகா உரை

(பதுளை)

லஞ்சம், ஊழல், வன்செயல்கள் ஆகியவற்றை முற்றாக ஒழித்துக் கட்டுவதே முதலான குறிக்கோள் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க நேற்று பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்க ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற மோசடிகள் ஊழல்கள் பற்றி குறிப்பிட்ட அவர்கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவிற்கு அவை நிலவின என குறிப்பிட்டார்.

துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தில் கோடிக் கணக்கான ரூபா பணம் கரியாக்கப்பட்டது. ஊவா பிரதேசத்திலும் ரஜரட்டை பிரதேசத்திலும் உள்ள சகல குளங்களையும் புனரமைப்பு செய்து விவசாயத்துறையை விருத்திசெய்ய இந்தப்பணத்தில் 10ல்ஒருபங்கும் தேவைப்பட்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு அரசுநடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தோட்டத்துறை ஊழியர்களின் உற்சவ முற்பணம் 600 லிருந்து ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

17 வருடகாலமாக நிலவிய லஞ்சம், ஊழல் வன்செயல்களை முடிவுக்கு கொண்டுவர கடந்த தேர்தலில் வெற்றியீட்டியமை பெரிதும் உதவுகிறது. முன்னைய வன்செயல்கள் தற்போது மறைந்த கதையாகி விட்டது என்றும் பிரதமர் மேலும் கூறினர்.

கே-ரி

## பலதும் பத்தும்

### பாம்புக்கடி

பாம்புகள் பல வகை. தண்ணீரில் வசிக்கும் சில விஷமில்லாதவை. சாரைப் பாம்பு கடிக்காதாம்: ஆனல் தன்னுடைய வாலைக் கொண்டு அடிக்கும். மரம் செடிகளில் வாழும் ஒரு வகைப் பச்சைப் பாம்பு கடிப்பதில்லை. அருகில் மனிதன் சென்றால்.. தன் கூரிய மூக்கினால் கண்ணைக்குத்தும்

விஷப்பாம்புகளில் நான்கு பற்களிலும் உள்ள துவாரங்களில் விஷம் உண்டு. கடித்த 96 மாத்திரை வரை விஷம் கடிவாயிலில் நிற்குமாம்.

ஒரு பற்கடியால் (காற்கடி) தோலுக்கும் இரு பற்கடியால் (அரைக்கடி) தசைகளுக்கும் மூன்று பற்கடியால் (முக்காற்கடி) எலும்புக்கும் நான்குபற்கடியால் (முழுக்கடி) மூளைக்கும் விஷம் ஏறுமாம்!

மழை காலம்... கவனம்.. முதற் சிகிச்சை விஷம் ஏறாமற் கட்டுப்போடுவதுதான்.

—மயூரன்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 10- 21**

**வெள்ளி இரவு**

| | |
|---|---|
| 08-01 | லெப்ரினன்ட் கேணல் சந்தோசம் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி தேசிகன் எழுதிய ''சந்ததி மறவாத சந்தோசம்'' |
| 08-20 | அனைத்துலக விவசாயிகள் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி |
| 08-30 | செய்திகள் |
| 04-30 | அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய ''பேரினவாத யானை வருகிறது பின்னே அதன் மணியோசை வருகின்றது முன்னே'' |
| 08-50 | வாத்திய கானங்கள் |

**1994-10-22**

**சனி காலை**

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணசகம் |
| 07-15 | நீங்கள் கேட்டவை |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகை செய்திகள் |
| 07.40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |

# அரசியல் லாபம் கருதி விசாரணை நடத்த கூடாது

## காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

''கொலைகள் ஊழல்கள் வன்செயல்கள்பற்றிவிசாரணை நடத்துவதில் தவறேதும் இல்லை. ஆனல் இவைகளை அரசியல் லாபம் கருதி இதனை பயன்படுத்துவதை நான் எதிர்க்கிறேன்.

இவ்வாறு காமினி திசநாயக்கா கொழும்பில் நடத்திய பத்திரிகைகள் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கொலைப்படைகளின் நடவடிக்கைகளை முதலில் நானே எதிர்த்தேன். ஊழல் வன்செயல் பற்றியும் எதிர்ப்பு தெரிவித்துள்ளேன்.

ஜே. வி. பி. இயக்கம் ஜனநாயகத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். அவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாத செயல்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தது.

நாட்டில் தலைவர் அமைச்சர்கள்ஆகியோரும்அச்சத்துடனேயே வாழ நேரிட்டது ஐ. தே. க. ஆதரவாளர்களே கூடுதலாக ஜே.வி. பி இயக்கத்தினல் கொல்லப்பட்டனர். சிறிலங்கா சுதந்திரகட்சி கொம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(கே-ரி)

# பொது அமைப்புகளுக்கு அனுமதிச் சான்றிதழ்

[யாழ்ப்பாணம்]

பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புகளை பதிவு செய்தல் தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவையினல் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்களின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைத்த அமைப்புக்களை சமூக மட்டத்தில் தொடர்ந்து இயங்க அனுமதிக்கும் சான்றிதழ்களை வழங்கும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13 - 10 - 94 முதல் தமிழீழ நிர்வாக சேவை விண்ணப்ப படிவங்களை வழங்கும் நடவடிக்கைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்ட அதே வேளை 2-ம் கட்டமாக 25 - 10 94 முதல் மீண்டும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட உள்ளன.

பொதுசன பிரதிநிதித்துவமுடைய மத சார்புள்ள மத சார்பற்ற அமைப்புகள் எவையும் 1 - 1 - 95 முதல் சமூக மட்டங்களில் செயற்படுவதற்கு தமிழீழ நிர்வாக சேவை சான்றிதழ்கள் மிகவும் அவசியமானவை. என்று தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

-ரி

# பொ.ஐ.மு. திறந்த மனதுடன் செயற்பட்டு வருகிறதாம்!

(கொழும்பு)

''நாம் ஆட்சிக்கு வந்தால் நீண்டகாலமாக இந்தநாட்டில் நடைபெற்றுவரும் அர்த்தமற்ற யுத்தம் உடனடியாக நிறுத்தப்படும்; விடுதலைப்புலிகளுடன் நாம் நேரடியாகவே பேச்சுவார்த்தைகளை நடாத்தி நாட்டில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவோம்.''

இவ்வாறு தேர்தல் காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியினர் பொதுக்கூட்டங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தற்போது நிறைவேற்ற ஆரம்பித்துவிட்டார்கள் என்று கொழும்பு தமிழ் பத்திரிகை தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: பொதுசன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்களுக்குள் 1977ம் ஆண்டு முதல் இந்த நாட்டில் விதைக்கப்பட்ட இனவாதப் பிரச்னைக்கு முடிவுகட்டும்முகமாக யாழ்ப்பாண மண்ணில் சமாதானப் புறாவை பறக்க விட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் - யுத்த நிறுத்தங்கள் போன்றன பல தடவைகள் நடைபெற்றன. இவை அனைத்தும் காலப்போக்கில் செயலற்றுப்போய் விட்டன.

1985ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திம்புவில் நடைபெற்ற பேச்சுக்கள் 1987ம் ஆண்டு; இலங்கை-இந்திய ஒப்பந்தம்; 1989ம் ஆண்டு அரசு-புலிகள் பேச்சு இப்படி பல கட்டங்களில் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் பேரினவாத சிங்கள அரசியல்வாதிகளினல் இவை அனைத்தும் பாழடிக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தினல் அப்பாவித் தமிழ்மக்களும் சிங்களமக்களும் இறந்துவிட்டார்கள். கோடிக்கான சொத்துக்கள் நாசமாகி விட்டன. லட்சக்கணக்கான தமிழ் சிங்கள மக்கள் அகதிகளாகிவிட்டார்கள். இன்று தமிழ்மக்களும் பெரும்பாலான சிங்கள மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள்.

வருங்காலத்தில் மற்றைய அரசுகள் போல், இனவாதம் பேசி ஆட்சி நடாத்த முடியாது. அவ்வாறு ஆட்சி நடாத்தினல் நாடு இரண்டாக பிரிவதை யாராலுமே தடுக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்து கொண்ட பொது சனஐக்கிய முன்னணி தேர்தல்காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் முகமாக திறந்த மனதுடன் தற்போது செயல்பட ஆரம்பித்துவிட்டது.

இதன் முதல் கட்டமாக 1987-ம் ஆண்டுக்குப் பின்பு இலங்கை அரசின் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று முதல் தடவையாக பிரதமர் திருமதி சந்திரிகாவின்சமாதானதூதுக் குழுப் புறாக்களை சுமந்த வண்ணம் கடந்த வாரம் யாழ். மண்ணில் தரை இறங்கிய போது யாழ். மக்கள் அளித்த குதூகல வரவேற்பு தமிழர்களினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதான வேட்கையைத் துல்லியமாகவே எடுத்துக் காட்டுகின்றது என்று அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(வி-ரி)

# ஞானதானம்

வியாசரை நான் போற்றி வணங்குகின்றேன். மகாபாரதத்தை இயற்றியவரானவேத வியாசர் கூறுகிறார்; இந்தக் கலியுகத்தில் அரிய சாதனை ஒன்றிருக்கிறது. மற்ற யுகங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த தபோ முறைகளும், கடினமான யோக அநுஷ்டானங்களும் இக்காலத்தில் அனுஷ்டிக்கக் கூடியனவாக இல்லை இக்காலத்தில் நாம் செய்யக்கூடிய உயர்ந்த சாதாரண தான தர்மம் தான். தானங்களிலெல்லாம் தலையாயது ஆன்ம ஞானம் புகட்டுதல் அதற்கடுத்தது உலகியல் அறிவு கற்பித்தல் அடுத்தது ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுதல் கடைசியானது உணவும் நீரும் அளித்தல்.

ஆன்ம ஞானம் அளிப்பவன் ஒரு ஆன்மாவை பிறவிச் சூழலில் உழலாமல் காப்பாற்றுகிறான் உலகியல் அறிவு புகட்டுபவன் ஆன்ம ஞானத்தை அடைவதற்காக மனிதர் கண்களைத்திறந்து விடுகிறான்.

மற்றைய தானங்கள் இவ்விரு தானங்களைவிட மிகத் தாழ்ந்த படிகளில் தான் உள்ளன. ஆகவே ஆன்ம வித்தை புகட்டுதலே அனைத்திலும் சிறந்த பணி நாம் செய்யக் கூடிய மற்றைய தொண்டுகளெல்லாம் தாழ்ந்தவை என்பதை நீங்கள் அறிந்துணர வேண்டுவது அவசியம்.

மனிதனுக்கு ஆன்ம ஞானம் அளிப்பவன் தான் மனித குலத்துக்குப் பேருதவி செய்தவனாவான். * ஆன்மிகமே அனைத்திற்கும் உண்மையான

(6-ம் பக்கம் பார்க்க)

இயற்கையே எம் மூலதனம் அதை இழந்தால்.
நம் எதிர்காலம் பாலை வனம்

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க

# சந்திரிகா உறுதி தந்தால் போட்டியிலிருந்துவிலகுவேன்

— ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பத்தி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த நிரந்தரமான வாக்குறுதியை பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க இம் மாதம் 25ம் திகதிக்கு முன் வழங்குவாரானால் நிபந்தனைகளின்றி ஜனாதிபதித் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பத்தி தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்:

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்புக் கொண்ட பிரதமர் அரசியலமைப்பையும் தாம் ஆதரிககவில்லையெனக் குறிப்பிட்ட அவர் தனியே ஒருவருக்கு நிறைவேற்று அதிகாரம் வழகப்படுவதை தாம் எதிர்ப்பதாக் கூறினுர்.

அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

---

## இராணுவத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாரநாயக்க குமரரணதுங்காவின் கூற்று எமக்கு பெரும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது,

இவ்வாறு இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் பிரதமர் பி. பி. ஸி. க்கு அளித்த பேட்டிபற்றி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

பிரதமரின் கூற்றுக்கு ராணுவ அதிகாரிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

பிரதமரின் கூற்றினுல் எமது மனநிலை பாதிப்படைந்து விட்டது. பிரதமரின் கூற்று நாட்டுக்காக கூறப்பட்டதாக எமக்குத் தெரியவில்லை.

எந்த ஒரு அரசும் தனது வீரத்தையும், விசுவாசத்தையும் சாதாரணஒரு விடயமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நாம் எமது கடமைகளைத் தான் செய்தோம். தற்போதும் செய்து வருகின்றோம் பிரதமர்மிகவும்கடுமையாகவே நடந்து கொண்டதாகவும் தெரிவித்தனர். (வி-இ)

---

## படை அதிகாரி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எதிர்வரும் திங்கட்கிழமை 24-ம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தையின் போது இந்த ஆலோசனைகளை புலிகள் அரசு குழுவினரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. [இ]

---

காங்கேசன் சிமெந்து ஆலை:

# திருத்த வேலைகளை ஆராய நிபுணர்குழு விரைவு

(கொழும்பு)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையைத் திருத்தி அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு பொறியியலாளர், மற்றும் தொழில் நுட்பகுழு ஒன்று காங்கேசன் துறைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது,

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து அரசினுல் அனுப்பி வைக்கப்பட்ட இக்குழுவில் 18 பேர் அங்கம் வகிக்கின்றனர். (இ)

---

## பலஸ்தீன

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாகத் தெரிவிக்கப்பட்டது:

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தூதரகப் பிரிவு இந்த கட்டிடத்திலிருந்து இயங்கும். -இ

---

## படையினர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் கருத்துக்களையும் அரசு அறிந்துகொள்ளும்.

---

## யாழ். நூல்நிலையம் கட்டப்படும்

இதேவேளையில் 1981ம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ். பொது நூல்நிலையத்தை மீண்டும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு இணங்கியுள்ளதாகவும் தெரிக்கப்பட்டது. (இ)

---

பூநகரிபாதை திறக்கப்பட்டால்

# பயணிகளை படையினர் சோதனையிடப் போவதில்லை!

— ராணுவ வட்டாரங்இள் தகவல்.

[கொழும்பு]

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படுமிடத்து பூநகரியில் பயணிகளை சோதனையிடுவதற்கான காவல் நியலையமொன்றை போடப்போவதில்லை என்று இராணுவ வட்டாரம் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனுல் பூநகரி முகாமிலிருந்து நடமாட்டங்களை அவதானிக்கவேண்டியதேவை இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதை திறக்குமிடத்து பூநகரியிலுள்ள இராணுவ முகாமை அகற்றி கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்க வேண்டுமென்பது பாதை திறப்பு விவகாரத்தில் விடுதலைப் புலிகளில் நிலைப்பாடாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி-இ)

---

# 60 வயது கடைந்தோருக்கு சேவைநீக்க கடிதங்கள்

## யாழ். சுகாதாரசேவை பாதிப்புறலாம்;]

(பண்டத்தரிப்பு)

அறுபது வயது கடந்த அரச ஊழியர்களை சேவையிலிருந்து விலக்குவது என்ற புதிய அரசின் அறிவிப்புக்கு இணங்க யாழ். சுகாதாரப் பிராந்தியத்தில் கடமையாற்றும் 60 வயது கடந்தவர்களுக்கு சேவை நீக்கக் கடிதங்களை யாழ். சுகாதாரத் திணைக்களம் அனுப்பி வருகின்றது.

யாழ். சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் பலவற்றில் அறுபதுவயது கடத்த பல டாக்டர்கள் பதிவு செய் செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் கடமையாற்றி வருவதாகவும் இவர்களின் சேவை நிறுத்தப்படும் பட்சத்தில் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இரண்டு டாக்டர்கள்கடயையாற்றவேண்டிய கிராமிய வைத்தியசாலைகளில் ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. பொது சுகாதாரப் பரிசோதகர்களாகவும் அறுபது வயது கடந்த பத்துககும் மேற்பட்டவர்கள் யாழ், மாவட்டத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களும் சேவை நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் சுகாதாரப் பாதிப்பு ஏற்படலாம் என்றும் கருத்து தெரிவிக்கப் படுகின்றது. ஏற்கனவேபொது சுகாதார பரிசோதகர்கள் பற்ருக்குறையினுல் பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (72-இ)

---

## பஸ்சேவை

### நேரம் நீடிப்பு

[யாழ்ப்பாணம்[

யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து யாழ்-சாவகச்சேரி, யாழ் - மூளாய், யாழ்-தெல்லிப்பழை ஆகிய சேவைப் பாதைகளில் நேற்று முதல் இரவு 7.00 மணிவரை சேவை நடைபெற்றது.

எதிர்வரும் 26-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கும் இரவு 7 மணிவரை சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

## ஞானதானம்

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

அத்திவாரமாகும். ஆகவே தான் ஆன்மீக தேவைகளில் உதவி செய்தவர்கள் மிகுந்த சக்தியும் செல்வக்கும் பெற்று விளங்குகிருர்கள். ஆன்மபலம் பெற்ற மனிதன் விரும்பினுல் மற்ற எல்லாத் துறைகளிலும் வல்லவனுக விளங்க முடியும் மனிதனுக்கு ஆன்ம பலம் ஏற்படும் வரை அவனுல் உலகியல் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாது.

— சுவாமி விவேகானந்தர்

நன்றி; சிவதொண்டன்

---

## அதிபர்கள் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று வெள்ளி பிற்பகல் 3-30 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (139)

---

# சந்திரிகாவின் சமாதான முயற்சிகளை ஆதரிப்பேன்!

—ஏ. ஜே. ரணசிங்க

[கொழும்பு[

''பலவருடங்களுக்குப் பின் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தலைமையில் ஒரு சிறந்த அரசாங்கம தற்போது ஆட்சிக்கு வந்துள்ளது. பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கு நான் முழு ஆதரவையும் வழங்குவேன்''.

முன்னுள் ஐ. தே. கட்சியின் அமைச்சரும், தற்போது ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுபவருமான திரு. ஏ. ஜே, ரணசிங்க நேற்றுப் பத்திரினகயாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. ரணசிங்கா மேலும் கூறுகையில்; நான் தேர்தலில் வெற்றிபெற்ருல், பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் சமாதான முயற்சிகளுக்கும், அதன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் ஒருபோதும் குறுக்கே நிற்கமாட்டேன் என்ருர்.

முன்னுள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் நான் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்க மாட்டேன் என்ருர். (வி-இ)

---

# யாழ். தேர்தல் வழக்கு நேற்று விசாரணை

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் 16-ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது யாழ்; மாவட்டத்திலிருந்து தெரிவான 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று தேர்தல் ஆட்சேப மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிபதி சரத் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1981-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் சட்ட இலக்கம் - 1,இன் பிரகாரம் விசாரணைக்கு மூன்று ஆட்சேப மனுக்களும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் ஆயினும் இவ்விசாரணைகளை நவம்பர் மாதத்திற்கு ஒத்திப்போடுவதாகவுப் இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தெரிவித்தார்.

குறிப்பிட்ட விசாரணைகள் முறையே நவம்பர் 14, 23 டிசம்பர் 13 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்ட மூன்று ஆட்சேபனைகளும் யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு-1, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் என்பவற்றினுல் தாக்கல் செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இரு தரப்பினரும் தமது சாட்சியங்களின் பட்டியலை அடுத்த மாதம் முதலாம்திகதியன்ருே அல்லது அதற்கு முன்னராகவோ சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இவர்களின் ஆட்சேப மனுவில் தேர்தல் ஆணையாளர், யாழ்.மாவட்டட அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேர் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப் பட்டுள்ளனர். (க-இ)

---

## பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட உள்ளுராட்சித் திணைக்கள ஊழியர்களினதும், றெயில்வே திணைக்கள ஊழியர்களினதும் அக்டோபர் மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினுல் நேற்று உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (71-இ)

---

## நாளை மாவுடன் கோமாரி வருகிறது

(அரியாலை)

திருகோணமலையிலிருந்து 3200 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு கோமாரி கப்பல் நாளைக் காலை பருத்தித்துறை துறைமுகம் வருகிறது. இந்த மா வந்ததும் யாழ். குடாநாட்டில் நிலவும் மா தட்டுப்பாடு நீங்குமென தெரிவிக்கம்படுகிறது. 160-59-இ

---

## லெப். கேணல் சந்தோசம் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரர் நினைவு நாளாகிய இன்று மாலை 4 மணிக்கு லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரர், லெப், கேணல் பொன்னம்மான், லெப். கேணல் புலேந்திரன் ஆகிய மூவரினதும் நினைவுருவங்கள் ஒன்ருக வரையப்பட்ட கட்டவுட் ஒன்று யாழ். காங்கேசன் துறை வீதி தாவடிச் சந்தியில் தாவடி வாழ் மக்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஈகச்சுடரேற்றி லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரின் பெற்ருேரினுல் நினைவுருவப் படம் திறந்து வைக்கப்படும்.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

**Registered as a News Paper at the General Pcs Office Sri Lanka under Licerce Nomber B/16336/B.**